**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 187 of 2023**

Prosecution witness LW10 (PW4) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| Name | : | திரு.மாதையன் | Father's Name | : | திரு.முத்துசாமி |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் ஏணிபெண்டா கிராமத்தில் வசிக்கிறேன் . ஆஜர் எதிரி பெரியசாமியும் ஏணிபெண்டா கிராமத்தை சேர்ந்தவர் தான் . எதிரி பெரியசாமிக்கு நான்கு பிள்ளைகள் . அவர்கள் பெயர் முருகன் , பழனி, இடும்பன், கிருஷ்ணன், பெரியசாமி மனைவி பெயர் பாஞ்சாலை . பாஞ்சாலிக்கும் பெரியசாமிக்கு என்ன பிரச்சனை என்ற விவரம் தெரியாது . நான் போய் பார்த்தபோது பாஞ்சாலிக்கும் , பழனிக்கும் காயம் ஏற்பட்டு இருந்தது. பாஞ்சாலிக்கு வலது பக்க மார்பிலும் , இடது பக்க உள்ளங்கையிலும் காயம் ஏற்பட்டு இருந்தது . பழனிக்கு இடது உள்ளங்கை காயம் ஏற்பட்டு இருந்தது . வெட்டிய பெரியசாமி அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டார். இந்த சம்பவம் நடந்தது 6 வருடங்களாகிறது. சம்பவம் நடந்தபோது மதியம் சுமார் 2.00 மணி இருக்கும். சம்பவம் நடந்த மறுநாள் நானும் , மகேந்திரனும் குந்துக்கோட்டை அருகே வந்துக்கொண்டு இருந்தபோது பெரியசாமியை போலீசார் பிடித்து விசாரித்துக்கொண்டு

இருந்தார்கள். அதன்பிறகு என்னிடமும் , மகேந்திரனிடமும் போலீசார் கையெழுத்து வாங்கினார்கள் . தற்போது காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையது தான் . போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:24:24 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 187 of 2023**

Prosecution witness LW7 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.கிருஷ்ணன் | Father's Name | : | திரு.ராஜா (எ) பெரியசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது வண்ணாத்திபட்டி கிராமத்திற்கு வசிக்கிறேன் . இதற்கு முன்பு ஏணிபெண்டா கிராமத்தில் வசித்தேன் . எனக்கு மூன்று அண்ணன்கள். அவர்கள் பெயர் முருகன் , இடும்பன், பழனி ஆகியோர் ஆவார்கள். என் அம்மா பெயர் பாஞ்சாலி . இந்த சம்பவம் நடப்பதற்கு ஒரு வருடம் முன்பாக என் அப்பாவும் , என் அம்மாவும் சண்டை போட்டு பேசாமல் இருந்தார்கள். சண்டை போட்டபிறகு என் அம்மா ஏணிபெண்டா கிராமத்தில் எங்களுடலும் என் அண்ணனுடனும் வசித்து வந்தார் . அதிலும் பிரச்சனை ஏற்பட்டது. 2020 வருடம், 3 ம் மாதம், தேதி ஞாபகமில்லை . சாயங்காலம் 8.00-8.30 மணிக்கு நான் வெளியே இருந்தபொழுது பக்கத்து வீட்டுகாரர் மகேந்திரன்போன் செய்து என் அப்பாவுக்கும் , அம்மாவுக்கும் சண்டை வந்து அப்பா அம்மாவை வெட்டிவிட்டார் என்றும் , அண்ணன் பழனியை வெட்டிவிட்டதாகவும் தகவல் சொன்னார் . அந்த சமயத்தில் நான் பெங்களூரில் வேலை செய்து வந்தேன் தகவல் கிடைத்தவுடன் சேலம் அரசு

மருத்துவமனைக்கு போய் என் அம்மாவை பார்த்தேன் . என் அம்மாவுக்கு வலது பக்க மார்பில் ஒரு காயமும் , இடது உள்ளங்கை பெருவிரலில் காயம் ஏற்பட்டு இருந்தது . என் அண்ணனுக்கு இடது உள்ளங்கையில் காயம் ஏற்பட்டு இருந்தது , இடது காதிலும் காயம் ஏற்பட்டு இருந்தது . பழனி என்னை ஓசூர் வந்து அங்கு இருந்து என்னை அழைத்துக்கொண்டு சேலம் மருத்துவமனைக்கு வந்து என் அம்மாவை பார்த்தேன். இது சம்பந்தமாக என் அண்ணன் பழனி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் . இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை : இல்லை</u>.

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:24:31 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**
KRISHNAGIRI

**Session Case No. 187 of 2023**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பாஞ்சாலி | Husband's Name | : | திரு.ராஜா எ பெரியசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஏணிபெண்டா கிராமத்தில் வசிக்கிறேன் . அதற்கு முன்பு வண்ணாத்திபட்டியில் குடியிருந்தேன் . எனக்கு நான்கு பிள்ளைகள் . பெரியவன் முருகன், சின்னவன் இடும்பன், பழனி , கிருஷ்ணன் ஆகியோர் ஆவார்கள். என்னை என் புருஷன் என்மீது சந்தேகப்பட்டு நான் யாரையோ வைத்திருப்பதாக சொல்லி கத்தியால் நான் வேண்டாம் வேண்டாம் என்று சொல்லியும் எனது இடது கை பெருவிரல் மற்றும் வலது பக்க மார்பு ஆகிய இடங்களில் குத்தி காயம் ஏற்படுத்தினார் . எனக்கு அடிப்பட்ட சம்பவம் 6 வருடங்களுக்கு முன்பாக ஏணிபெண்டா கிராமத்தில் எங்கள் வீட்டு வாசலில் வைத்து மாலை 5.00 மணி வாக்கில் நடைபெற்றது. அப்போது என் மகன் பழனி வேண்டாம் வேண்டாம் என்று தடுத்த போது அவரையும் என்னுடைய புருஷன் காதின் மீது வெட்டிவிட்டார் . இடது கையிலும் என் மகன் பழனியை வெட்டிவிட்டார் , என் மகன் காலிலும் வெட்டிவிட்டார் . பக்கத்துவீட்டுகாரர் பையன் மணி வந்து எங்களை காப்பாற்றினார். முதலில்

தேன்கனிக்கோட்டை ஜி .எச் –க்கு நாங்கள் போனோம் அதன்பிறகு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு வந்து, அங்கும் முடியாது என்றதால் தர்மபுரி மருத்துவமனைக்கு போய்விட்டு சேலம் மருத்துவமனைக்கு போனேன். நான் 16 நாட்கள் ஆஸ்பித்திரியில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். என் மகன் பழனி இது சம்பந்தமாக காவல் நிலையத்தில் Complaint கொடுத்தார். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தியை கொண்டு தான் என்னுடைய கணவர் என்னையும் , என் மகனையும் வெட்டினார். போலீசார் என்னை 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். தற்போது நான் என் கணவருடன் வசிக்கவில்லை , என் பிள்ளைகளுடன் தான் வசித்து வருகிறேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:24:37 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 187 of 2023**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பழனி | Father's Name | : | திரு.ராஜா (எ) பெரியசாமி |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது தேன்கனிக்கோட்டை தாலுக்கா ஏணிபெண்டா என்ற கிராமத்தில் வசிக்கிறேன். என் அப்பா பெயர் ராஜா (எ) பெரியசாமி அம்மா பெயர் பாஞ்சாலி ,தம்பி பெயர் கிருஷ்ணன் . நான் காரை வேலை செய்கிறேன். எனக்கு இரண்டு அண்ணன்கள் பெரிய அண்ணன் பெயர் முருகன், சின்ன அண்ணன் பெயர் இடும்பன் . 2020 வருடம் 3 ம் மாதம், தேதி ஞாபகமில்லை. சாயங்காலம் 7.00 மணி அளவில் நான் வீட்டில் இருந்தேன் . வீட்டில் அம்மாவும் நானும் இருந்தோம். ஒரு நாள் முன்பாக என் அப்பா என் வீட்டிற்கு வந்திருந்தார். என் அப்பா அதற்கு முன்பு வண்ணாத்திபட்டியில் இருந்து வந்தார்.

வண்ணாத்திபட்டியில் என் அம்மாவும் , அப்பாவும் இருந்தார்கள், அதன்பிறகு சண்டையாகி என் அம்மா ஏணிபெண்டா கிராமத்திற்கு வந்துவிட்டார். சம்பவ சமயத்தில் நான் வீட்டிற்கு வெளியே இருந்தேன் , என் அம்மா மற்றும் அப்பா வீட்டின் உள்ளே இருந்தார்கள். அதன்பிறகு என் அப்பா

என் அம்மாவை தகாத வார்த்தையால் திட்டி என் அம்மாவின் வலது பக்க மார்பில் குத்திவிட்டார். நான் தடுக்க போனபோது என் அப்பா என் காதின் மீது கத்தியால் வெட்டினார். (தற்போது சாட்சி தன் இடதுபக்க காதை காட்டி அந்த இடத்தில் வெட்டியதாக கூறுகிறார் ). நான் இடது கையால் என் அப்பா வைத்திருந்த கத்தியை பிடித்தேன் . அப்போது கத்தியை என் அப்பா இழுத்தார், அப்பொழுது எனக்கு இடது உள்ளங்கையில் இரத்த காயம் ஏற்பட்டது. ( சாட்சி இடது உள்ளங்கையை காணபித்தபோது அதில் கோடுபோன்ற ஒரு தழுப்பு காணப்படுகிறது .)என் வீட்டின் பக்கம் இருந்த என்னுடைய நண்பர் மணி , சேட்டு ஆகியோர் என் வீட்டிற்கு வந்தார்கள் . வந்தவர்கள் என்னையும் என் அம்மாவையும் தேன்கனிக்கோட்டை ஜி .எச் மருத்துவமனைக்கு அழைத்துபோனார்கள் . இது சம்பந்தமாக தேன்கனிக்கோட்டை போலீசார் , தேன்கனிக்கோட்டை ஜி .எச் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான் . புகார் வாக்குமூலம் **Ex.P.1** ஆகும். நான் தேன்கனிக்கோட்டை மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் . என் அம்மா கிருஷ்ணகிரி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு அதன்பிறகு மீண்டும் சேலம் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார். தற்போது காண்பிக்கப்படும் கத்தியை கொண்டுதான் என் அப்பா என்னையும் , என் அம்மாவையும் வெட்டினார். அந்த கத்தி **Mo.1** ஆகும். என் அப்பாவுடைய அப்பா வண்ணாத்திபட்டியில் குடியிருந்தார். என் அப்பாவும் , அம்மாவும்

அடிக்கடி சண்டை போட்டுக்கொள்வார்கள் . அன்றைக்கும், சண்டை போட்டுக்கொண்டதால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை.**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:24:46 +0530